**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி.கா.பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.214/2018**
**( TNDG07-000589-2018 )**

**திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், பழனியாண்டவர் நகர், வடக்குத் தெரு, கதவு எண்.141-ல் இருக்கும் (லேட்) காளியப்பன் சேர்வை என்பவரின் பேத்தியும், லேட்.கா.சுப்பிரமணியன் என்பவரின் மூத்த மகளும், கணேசன் என்பவரின் மனைவியுமான சுமார் 47 வயதுள்ள பாண்டிசெல்வி.**

**--- வாதி**

**எதிர்**

1. **திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.மு.காளியப்பன் சேர்வை என்பவரின் மருமகளும், லேட்.மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் மனைவியுமான சுமார் 69 வயதுள்ள காமாட்சி அம்மாள்.**
2. **திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் பேரனும், மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் மூத்த மகனுமான சுமார் 48 வயதுள்ள பாலமுருகன்.**
3. **திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் பேரனும், மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் இரண்டாவது மகனுமான சுமார் 45 வயதுள்ள செந்தில்குமார்.**
4. **திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் பேரனும், மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் இரண்டாவது மகளுமான சுமார் 43 வயதுள்ள பாண்டீஸ்வரி.**
5. **திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் பேரனும், மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் நான்காவது மகனுமான சுமார் 41 வயதுள்ள பாண்டியராஜன்.**

6. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் பேரனும், மு.கா.சுப்பிரமணியன் என்பவரின் மூன்றாவது மகளுமான சுமார் 39 வயதுள்ள ரத்னப்பிரியா.
7. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் மகன் சுமார் 75 வயதுள்ள நாட்ராயன்.
8. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் மூத்த மகளும், முருகேசன் என்பவரின் மனைவியுமான சுமார் 78 வயதுள்ள ராஜாத்தி.
9. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரிப்பட்டி கிராமம், கஸ்பா, சிவகிரிப்பட்டியில் வசிக்கும் லேட்.காளியப்ப சேர்வை என்பவரின் இரண்டாவது மகளும், லேட்.தங்கராஜ் என்பவரின் மனைவியுமான சுமார் 70 வயதுள்ள தனலட்சுமி.
10. வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி நகர்.
11. இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி, தமிழ்நாடு மாநிலம், இருப்பிடம் The Indian Medical and Homeopathy Department, Office at Beach Road, Chennai –11.

.. பிரதிவாதிகள்

தாவாச் சொத்து குறித்து வாதியின் பாட்டி குருவம்மாள் (எ) லட்சுமி கடந்த 04.05.1963ம் தேதி எழுதிக்கொடுத்த பழனி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.675/1963 ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும், அதை ரத்து செய்தும் விளம்புகை செய்யும்படி கோரியும், தாவாச் சொத்து குறித்து வாதியின் தகப்பனார் சுப்பிரமணியன் அவர்கள் கடந்த 01.10.1991ம் தேதி எழுதிக்கொடுத்த பழனி 2நிர் இணை சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.58/1991 ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும், அதை ரத்து செய்தும் விளம்புகை செய்யும்படி கோரியும், தாவாச் சொத்துக்கள் குறித்து 10, 11 பிரதிவாதிகள் வசமுள்ள நஷ்டஈடு தொகைகளை இவ்வழக்கு தீர்ப்பு பகரும் வரை 7ம் பிரதிவாதிக்கோ அல்லது மற்ற நபர்களுக்கோ வழங்கக்கூடாது என நிரந்தர தடை உத்தரவு வழங்கும்படி கோரியும், இந்த வழக்கின் செலவு தொகையை வாதிக்கு,

பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இதர பரிகாரங்கள் வழங்கும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மதிப்பு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 1. பிரிவு | : | 40 மற்றும் 27(சி) |
| 2. வழக்கின் தன்மை | : | விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் |
| 3. வழக்கின் மதிப்பு | : | ரூ.2,61,000/– |
| 4. நீதிமன்ற கட்டணம் | : | ரூ.7830/– செலுத்தப்பட்டுள்ளது. |
| வழக்கு மூலம் | : | 17.09.1939, 04.05.1963 மற்றும் 11.11.2016 |
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 22.06.2018 |

இந்த வழக்கானது கடந்த 22.06.2018ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில், என் முன்பாக வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் G.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் N.திருமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 7ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 8 மற்றும் 9 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் 1 முதல் 6, 10 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–ஐ 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டிய

நிலையில், 7ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை 12 மற்றும் 13 பிரதிவாதிகளாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பிராதை திருத்தம் செய்ய வாதிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்யாததாலும், வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. செலவுத் தொகை பற்றிய உத்தரவு இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

1) மதுரை ரிடிடு, பழனி சப்டிடு, பழனி தாலுகா, சிவகிரிப்பட்டி கிராமம், சர்வை புலத்தில் 26 நெ பட்டாவில் கண்ட சர்வே எண்.124/A1 நெ நிலம் ஏக்கர் 8 செண்ட் 38–ல் கீழ்புறம் 2.74–க்கு மால்,

வடக்கு – முருகைய சேர்வை நிலம்

கிழக்கு – பழனியப்ப சேர்வை நிலம்

தெற்கு – கிழமேல் இட்டேரி

மேற்கு – சர்வே எண்.124/A1

2) மேற்படி நெம்பரில் பழனியப்ப சேர்வை பாக நிலத்திற்கு மேல்புறம் செண்ட் 93க்கு மால்.

வடக்கு – பழனியப்ப சேர்வை நிலம்

கிழக்கு – பழனியப்ப சேர்வை பாக நிலம்

தெற்கு – இட்டேரி பாதை

மேற்கு – முருகையா சேர்வை நிலம்

**இதற்குள் மேல்சொல்லிய செண்ட் 93 உள்ள நிலம் பூராவும் ஆக மொத்தம் ஏக் 3 செ.67.**

**------**

**2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.**

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.07.08 18:18:22 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**கூடுதல் சார்பு நீதிமன்றம்,**
**பழனி.**
**அ.வ.எண்.214/2018**
**தீர்ப்பாணை**
**நாள்: – 26.06.2023**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**அ.வ.எண்.214/2018**

**பாண்டிசெல்வி -- வாதி**

**எதிர்**

**காமாட்சி அம்மாள் மற்றும் பத்து நபர்கள் -- பிரதிவாதிகள்**

**<u>மதிப்பு ச் சீட்டு</u>**

| | | |
|---|---|---|
| 1. | வழக்கின் தன்மை | : விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் |
| 2. | சட்டப்பிரிவு | : 40 மற்றும் 27(சி) |
| 3. | வழக்கின் மதிப்பு | : ரூ.2,61,000/- |
| 4. | நீதிமன்ற கட்டணம் | : ரூ.7,830/- செலுத்தப்பட்டுள்ளது. |

**உத்தரவுப்படி**
**(ஒம்) கே.ஜெயந்தி**
**தலைமை எழுத்தர்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம்,**
**பழனி.**